# தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி
## Tamilische Frauen Organisation e.V.

Tamilische Frauen Organisation e.V. Postfach 311238, 70471 Stuttgart

**Tamilische Frauen Organisation e.V.**
Postfach 311238
70471 Stuttgart
info@tfo-germany.de

# வாகைமயில் 2024

தமிழ்ப் பெண்கள் அமைப்பு – யேர்மனி நடாத்தும்
வாகைமயில் விருதுக்கான மாபெரும் நடனப்போட்டி

யேர்மனியில் நடனக்கலை ஆர்வலர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து நடனக்கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் நோக்கில், நாடு தழுவிய மட்டத்தில் வாகைமயில் என்னும் மாபெரும் பரதநாட்டிய நடனப்போட்டியை நடாத்தவுள்ளோம். நடனக்கலை பயில்வோர்களின் கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் மாபெரும் போட்டி நிகழ்வாக வாகைமயில் அமையும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். யேர்மன் தழுவிய மட்டத்தில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு வாகைவிருதுகள் வழங்கி மதிப்பளிக்கும் மாபெரும் போட்டி நிகழ்வாக அமையும்.

நடன ஆசிரியர்களினதும், நடனக்கலைஞர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க **வாகைமயில் 2024இன் போட்டிமுறைகளை மாற்றி அமைத்துள்ளோம். 16.03.2024 சனிக்கிழமை, 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் தெரிவுப்போட்டிகள் இன்றி நிறைவுப்போட்டியாக வாகைமயில் நடைபெறும். சனிக்கிழமை 16.03.2024 நடைபெறும் நடனப்போட்டிகளின் முடிவுகள் மாலை அறிவிக்கப்பட்டு, கலைஞர்களுக்கான மதிப்பளிப்புகள் ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) வழங்கப்படும்.** அனைத்து ஆசிரியர்களும் நடனக்கலைஞர்களும் இம்மாற்றத்தைக் கவனத்தில் கொண்டு போட்டிகளில் பங்குபற்றி, உங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யேர்மனியில் தமிழாலயங்கள், தமிழ்க்கலைக்கூடங்கள் ஆகியவற்றில் நடனக்கலை பயிலும் மாணவர்களும் நடனக்கலை பயிற்றுவிக்கும் கலைநிறுவனங்களும் இப்போட்டி நிகழ்வில் பங்குபற்றிப் பயனடையுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

## தனிநடனப்போட்டி

**ஆரம்பப்பிரிவு**
நடனப்போட்டியாளர் **01.01.2016 – 31.12.2018க்கு உட்பட்டவராக** இருத்தல் வேண்டும். விரும்பிய **அபிநயப்பாடல்** ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும்.
**நேரம் 3 - 5 மணித்துளிகள்.**

**கீழ்ப்பிரிவு**
நடனப்போட்டியாளர் **01.01.2013 – 31.12.2015க்கு உட்பட்டவராக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **அலாரிப்பு (**திஸ்ரஜாதி,மிஸ்ரஜாதி) தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
**நேரம் 3 - 5 மணித்துளிகள்.**

**மத்தியபிரிவு**
நடனப்போட்டியாளர் **01.01.2010 – 31.12.2012க்கு உட்பட்டவராக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **கீர்த்தனம்** தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
**நேரம் 5 - 7 மணித்துளிகள்.**

**மேற்பிரிவு**
நடனப்போட்டியாளர் **01.01.2007 – 31.12.2009க்கு உட்பட்டவராக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **தில்லானா** தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
**நேரம் 7 – 8 மணித்துளிகள்.**

**அதிமேற்பிரிவு**
நடனப்போட்டியாளர் **01.01.2003 – 31.12.2006க்கு உட்பட்டவராக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **ஜாவளி** தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
**நேரம் 6 - 8 மணித்துளிகள்.**

**21 வயதிற்கு மேற்பட்டோர் (01.01.2002 )**
நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **பதம்** தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
**நேரம் 8 - 10 மணித்துளிகள்.**

**ஆற்றுகைத்திறன் முடித்தவர்கள்**

**இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் விளைவுகளும் , அதற்கான தீர்வுகளும்.**
இதனை வெளிப்படுத்தும் விதமாக நடனம் அமைந்திருத்தல் வேண்டும்.
பொருத்தமான வாத்திய இசையையும் பாடல்களையும் தெரிவுசெய்யலாம்.
தேவை ஏற்படின் உடைகளில் உபகரணங்களைப் (property ) பயன்படுத்தலாம்.

**நேரம் 8 - 10 மணித்துளிகள்.**

## குழுநடனப் போட்டி

### ஆரம்பப்பிரிவு

நடனப்போட்டியாளர்கள் **01.01.2016 – 31.12.2018க்கு உட்பட்டவர்களாக** இருத்தல் வேண்டும். **தொழில் நடனத்தில்** விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும். குழுவில் குறைந்தது **4க்கு மேற்பட்ட நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 4 - 5 மணித்துளிகள்.**

### கீழ்ப்பிரிவு

நடனப்போட்டியாளர்கள் **01.01.2013 – 31.12.2015க்கு உட்பட்டவர்களாக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **கௌத்துவம்** தெரிவு செய்யப்படுதல் வேண்டும். குழுவில் குறைந்தது **4க்கு மேற்பட்ட நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 5 - 6 மணித்துளிகள்.**

### மத்தியபிரிவு

நடனப்போட்டியாளர்கள் **01.01.2010 – 31.12.2012க்கு உட்பட்டவர்களாக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **சப்தம்** தெரிவு செய்யப்படுதல் வேண்டும். குழுவில் குறைந்தது **2க்கு மேற்பட்ட நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 6 - 8 மணித்துளிகள்.**

### மேற்பிரிவு

நடனப்போட்டியாளர்கள் **01.01.2007 – 31.12.2009க்கு உட்பட்டவர்களாக** இருத்தல் வேண்டும். நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **மல்லாரி** தெரிவு செய்யப்படுதல் வேண்டும். குழுவில் குறைந்தது **2க்கு மேற்பட்ட நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 6 - 8 மணித்துளிகள்.**

### அதிமேற்பிரிவு

நடனப்போட்டியாளர் **01.01.2003 – 31.12.2006க்கு உட்பட்டவர்களாக** இருத்தல் வேண்டும். விரும்பிய **நாட்டிய நாடகம்** (புராண, இதிகாச, தாயக மாவீரர்கள், மன்னர்கள் வரலாறு) தெரிவு செய்யப்படுதல் வேண்டும். குழுவில் குறைந்தது **2க்கு மேற்பட்ட நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 6 - 8 மணித்துளிகள்.**

### 21 வயதுக்கு மேற்பட்டோர் (01.01.2002 )

நடன உருப்படிகளுக்குள் ஒன்றான **வர்ணம்** ( சிருங்கார ரசத்தில் அமைந்தது. பூர்வாங்கத்தில் இரண்டு ஜதிகளும் உத்தராங்கத்தில் குறைந்தது இரண்டு ஸ்வர சாகித்தியமும் செய்தல் வேண்டும். ) தெரிவு செய்யப்படுதல் வேண்டும். குழுவில் குறைந்தது **3 நடனப்போட்டியாளர்கள்** பங்குபற்ற வேண்டும்.
**நேரம் 10 - 15 மணித்துளிகள்.**

## <u>மதிப்பளிப்பு</u>

வாகைமயில் நடனப்போட்டியில் பங்குபற்றும் அனைத்துப்போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.
வாகைமயில் நிறைவுப்போட்டியில் ஒவ்வொரு தனிநடனப்பிரிவிலும் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்குள் அதிசிறந்த போட்டியாளருக்கு **வாகைமயில்** எனும் விருது வழங்கி மதிப்பளிக்கப்படும்.
இரண்டாம் மூன்றாம் இடங்களைப்பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.
குழுநடனப்பிரிவில் **முதல் மூன்று** இடங்களைப்பெறும் குழுக்களுக்கு அரங்கில் சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும். அத்துடன், குழுநடனப்பிரிவுகளில் பங்குபற்றும் அனைத்துப்போட்டியாளர்களுக்குள் அதிசிறந்த போட்டியாளருக்கு **வாகைமயில்** எனும் மாபெரும் விருது வழங்கி மதிப்பளிக்கப்படும்.

## <u>நடனத்திட்டமிடலும் நடுவம் செய்வோரின் எதிர்பார்ப்பும்</u>

வாகைமயில் போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதும் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**நிருத்தம், நிருத்தியம், நடன அமைப்பு, உடை அலங்காரம், பாடல் தெரிவு, பங்குபற்றுவோரின் எண்ணிக்கை, பாடல், நேரக்கணிப்பு** போன்றவிடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். நடன உருப்படிகள் வரையறைக்குள் உட்பட்டிருத்தல் வேண்டும். போட்டியாளர்கள் நடன உருப்படிகளின் ஆக்கங்களை (Choreography) இணையத்தளங்களிலிருந்து பிரதி செய்யக்கூடாது.

## <u>மேலதிக குறிப்புகள்</u>

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட நடனப்போட்டிகளில் பங்குபற்றலாம்.
நடனக்கலைஞர்கள் வயதுப் பிரிவைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். குறைந்த வயதினர் கூடிய வயதினருடைய நடனப்பிரிவுப் போட்டிகளில் பங்குபற்றலாம். ஆனால், கூடிய வயதினர் குறைந்த வயதினருடைய நடனப்பிரிவுப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.
குழுநடனத்தில் வயதுப்பிரிவைக் கவனித்து குழுவில் பங்குகொள்ளும் மாணவர் தொகையை அதிகரிக்க, குறைந்த வயதுப்பிரிவினர் மேற்பிரிவுகளில் பங்குபற்றலாம். வயதுப்பிரிவை உறுதிப்படுத்தும் அத்தாட்சியை மண்டபத்தில் ஒப்படைக்க வேண்டும்.
நடனக்கலைஞர்களிள் நலன் கருதி மண்டபத்தில் பாடல்களை ஒலிபரப்பும்போது தடங்கல் ஏற்படாமல் இருக்க, நடனஆசியர்கள் உங்கள் மாணவர்களின் நடன உருப்படிகளுக்கான பாடல்களை இயலுமானவரை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு போட்டி நடைபெறும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(vaaheimayil@gmail.com) 0176-23647529

பாடல்களை **இரண்டு USB Stick** இல் கொண்டுவருதல் வேண்டும்.

**நடனக்கலைஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நடனப்போட்டிகளில் பங்குபற்றினால் அல்லது ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் போட்டிகளில் பங்குபற்றினால் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும்.**

**வயதுப்பிரிவு**

| | |
|---|---|
| ஆரம்பப்பிரிவு | 01.01.2016 – 31.12.2018 |
| கீழ்ப்பிரிவு | 01.01.2013 – 31.12.2015 |
| மத்தியபிரிவு | 01.01.2010 – 31.12.2012 |
| மேற்பிரிவு | 01.01.2007 – 31.12.2009 |
| அதிமேற்பிரிவு | 01.01.2003 – 31.12.2006 |
| 21 வயதிற்கு மேற்பட்டோர் | 01.01.2002 |

| | ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு | மத்தியபிரிவு | மேற்பிரிவு, அதிமேற்பிரிவு | 21 வயதிற்கு மேற்பட்டோர் |
|---|---|---|---|---|
| **தனிநடனப்போட்டி** | 20 € | 25 € | 35 € | 40 € |
| **குழுநடனப்போட்டி** பங்குபற்றும் ஒவ்வொரு நடனப் போட்டியாளரும் செலுத்த வேண்டிய கட்டணம். | 15 € | 25 € | 35 € | 40 € |

| இறுதிப்போட்டி<br>16.03.2024 | இறுதிப்போட்டி<br>17.03.2024 |
|---|---|
| **Kulturzentrum Mengeder Saalbau**<br>**Mengeder Markt 10**<br>**44359 Dortmund** | **Kulturzentrum Mengeder Saalbau**<br>**Mengeder Markt 10**<br>**44359 Dortmund** |

விண்ணப்பப்படிவத்தை **19.02.24**க்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி:

saravanamuthu sivaramathasan

windhuk str 8

42389 wuppertal.

vaaheimayil@gmail.com

தகவல் தொடர்புகளுக்கு 0176 – 42 05 29 39 , 0171 - 5015087

தமிழ்ப் பெண்கள் அமைப்பு – யேர்மனி